சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மூலம் நில எடுப்பு அசல் மனுக்களுக்கான உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை வழங்கும் இனங்களில் (Enhanced compensation LAOP cases) நிதி ஒப்பளிப்பு வழங்கும் அதிகாரத்தை பரவலாக்குவது குறித்து - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நி.எ.2) துறை

அரசாணை நிலை) எண். 80
நாள்: 7.7.2006

ஆணை:

1949ம் ஆண்டு முதல் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவு திட்டத்தில் இத் திட்டத்திற்கென நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. கிராமப் புறங்களில் ரூ.16,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறுபவர்களும். நகர்புறங்களில் ரூ.24,000/-க்கு குறைவாக ஆண்டு வருமானம் பெறுபவர்களும் இலவச வீட்டுமனைப் பட்டா பெற தகுதியுடையவர்களாகும். மாநகராட்சியில் 1 சென்டும், நகராட்சியில் 1 1/2 சென்டும், ஊரகப் பகுதியில் 3 சென்டும் வழங்கப்பட்டு வருகின்றன. தகுதியான புறம்போக்கு நிலம் இல்லாத நிலையில் ''மையநில எடுப்புச் சட்டம், 1894'' (Central Act 1/1894). ''தமிழ்நாடு ஆதிதிராவிடர்கள் நல திட்டங்களுக்கான நில எடுப்பு சட்டம் 1978'' (தமிழ்நாடு சட்டம் 31/78) மற்றும் நேரடிப் பேச்சு வார்த்தை மூலம் நிலம் அரசால் கையகப்படுத்தப்பட்டு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2. நிலம் கையகப்படுத்த நில எடுப்பு அலுவலரால் தீர்ப்பாணை வெளியிட்ட பின் நில உடமையாளர்களில் பெரும்பான்மையோர் இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கக் கோரி சார்பு நீதிமன்றத்தை அணுகி வழக்கு தாக்கல் செய்கின்றனர். மேலும், நில உரிமையாளர்கள் உயர் நீதிமன்றத்தை அணுகி, காலக் கெடு நிர்ணயித்து உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையை சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசுக்கு உருவாக்குகின்றனர். தவறினால் நில எடுப்பு அலுவலரின் அலுவலகத்தை ஜப்தி செய்வதற்கு நிறைவேற்று மனுவை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதால், அரசினால் செயற்குறிப்பினை பரிசீலனை செய்து ஆணை வெளியிட போதிய கால அவகாசம் கிடைப்பதில்லை.

3. இந்நிலையில் நில எடுப்பு இனங்களில் ஜப்தி நடவடிக்கையை தவிர்க்கும் பொருட்டு, நிறைவேற்று மனுவை செயலிழக்கச் செய்யும் வண்ணம், நில எடுப்பு அசல் மனுக்களுக்கான உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை வழங்கும் இனங்களில், கீழ்க்கண்டவாறு அதிகாரத்தை பகிர்ந்தளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(1) நீதிமன்றத்தின் இறுதியான உத்தரவு பெற்ற நேர்வுகளில்/ அரசாணை (நிலை) எண்.387, வருவாய்த் துறை நாள் 15.6.94ன்படி மேல்முறையீடு தேவையில்லாத நேர்வுகளில் / உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்த நேர்வுகளில்/ இடைக்கால உத்தரவை எதிர்த்து வழக்கு தொடர்ந்து தள்ளுபடி செய்யப்பட்ட நேர்வுகளில்/ ரூ.5.00/- இலட்சத்திற்குள் ஒப்பளிப்பு வழங்கப்பட வேண்டிய இனங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே ஒப்பளிப்பு வழங்கலாம்.
(2) மேலே (1) ல் குறிப்பிட்டுள்ளவாறு உள்ள இனங்களில் ரூ.5,00,001/- முதல் ரூ.10/- இலட்சம் வரை ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் ஒப்புதல் வழங்கலாம். ரூ.10/- இலட்சத்திற்கு மேலுள்ள இனங்களில் தற்போதைய நிலையே தொடரலாம்.
(3) முதலாவதாக நிதி நிலை ஒதுக்கத்திலிருந்து (Within the budget outlay) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.5 இலட்சம் வீதமும், மற்றும் ரூ.1/- கோடி ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தேவையான நேரத்தில், தேவைக்கேற்ப, இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

(4) மேலும் தற்போதுள்ள முறைப்படி நில எடுப்பு அசல் மனு குறித்த செயற்குறிப்புகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரடியாக அரசுக்கு அனுப்பப்படும் முறை கைவிடப்படுகிறது. இனிமேல் அனைத்து செயற்குறிப்புகளும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் வழியாகவே அரசுக்கு அனுப்பப்பட வேண்டும். ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களே இந்நேர்வுகள் குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும், அதாவது நீதிமன்ற வழக்குகளை கண்காணித்தல், உரிய நேரத்தில் எதிர்உறுதி ஆவணங்கள் தாக்கல் செய்தல், உரிய நேரத்தில் மேல்முறையீடு செய்தல், தேவைப்படும் இனங்களில் நீதிமன்ற ஆணைகள் முழுமையாக நிறைவேற்றுவதை உறுதி செய்தல் போன்ற இனங்களுக்கு பொறுப்பானவராகிறார்.

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 1882/FS/P/06, நாள் 4.6.06 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி/

பு. ஏ. இராமையா,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-35.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9.

நகல்

முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை -9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை-9
நிதித் துறை, சென்னை-9
வருவாய் துறை, சென்னை-9
சட்டத் துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
துறையின்அனைத்துப் பிரிவுகள், சென்னை-9
உபரி / இருப்புக்கோப்பு

/ /ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்